## *செலான் வங்கி லைசியம் சர்வதேச பாடசாலையுடன் அதன் இணையத்தளம் ஊடான கட்டணங்களை செலுத்தும் பிரதான வாயிலாக செயற்பட கூட்டிணைந்துள்ளது*

செலான் வங்கி லைசியம் சர்வதேச பாடசாலையுடன் அதன் இணையத்தளம் ஊடான கட்டணங்களை செலுத்தும் பிரதான வாயிலாக செயற்படுவதற்கான ஒப்பந்தம் ஒன்றினை கைச்சாத்திட்டுள்ளது

லைசியம் பல பாடவிதானங்களையும் மேலதிக தகைமைகளையும் உள்ளடக்கிய இலங்கையில் உள்ள மிகப் பெரிய சர்வதேச பாடசாலையாகும். நுகேகொடயை பிரதானமாக கொண்ட லைசியம் சர்வதேச பாடசாலையின் கிளைப்பாடசாலைகள் கம்பஹா, கந்தான, பானந்துறை, இரத்தினபுரி, மற்றும் வத்தளையில் அமைந்துள்ளன. பாலர் பாடசாலை முதல் உயர்தரம் வரை வகுப்புக்களை கொண்டுள்ளதுடன் இங்கு உள்நாட்டு மற்றும் லண்டன் பாடத்திட்டங்களுக்கமைவாக இரு முறைகளிலும் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.

செலான் வங்கியுடனான இப்புதிய இணைப்பின் மூலம் இப்பாடசாலையில் கல்வி பயிலும் சிறார்களின் பெற்றோர்கள் தமது குழந்தைகளின் மாதாந்த அல்லது ஆண்டு, அனுமதிக்கட்டணங்களை தமது வீசா கடன் அட்டையை உபயோகித்து அல்லது தமது செலான் வங்கிக் கணக்கிலிருந்து மாற்றுவதன் மூலம் இணைத்தளம் ஊடாக லைசியம் இற்கு செலுத்தலாம். அதாவது பெற்றோர்கள் தனிப்பட்ட முறையில் பாடசாலைக்கு கட்டணம் செலுத்துவதற்காக செல்லத் தேவையில்லை. தமது வீட்டிலிருந்தவாறே தமது குழந்தைகளின் பாடசாலைக்கட்டணங்களை செலுத்த முடியும். அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் www.lyceum.lk என்ற இணையத்தள முகவரிக்கு பிரவேசிப்பது மட்டுமே.

கடந்தகாலங்களிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த பல வாடிக்கையாளர்களுக்கு செலான் வங்கி இணையத்தளம் ஊடாக கட்டணங்களை பெறுவதற்கான பிரதான வாயிலாக செயற்பட்டுள்ளது. கட்டணங்கள் செலுத்துவதற்கான வீஸா வலைப்பின்னலையும் தமது இணையத்தளத்தையும் செலான் வங்கி கணக்குகளுடன் இணைப்பதன் மூலம் வர்த்தகதுறையினர் ஈ-வர்த்தகத்தினுள் பிரவேசிப்பதற்கான வாய்ப்பை செலான் வங்கி வழங்கியுள்ளது.

இணையத்தளம் ஊடான கட்டணங்களை செலுத்தும் பிரதான வாயிலாக செலான் செயற்படுவதை பலரும் விரும்பக்காரணம் அதன் இலகுவான பாவனை மற்றும் குறைந்த கட்டணமும் ஆகும். இது வர்த்தக துறையினரின் தேவையற்ற செலவுகளை குறைப்பதுடன் அவர்களின் விசுவாசமிக்க வாடிக்கையாளர்களுக்கான பல்வேறு செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு தேவையான தகவல் தளத்தையும் கொண்டிருக்க உதவும்.

இணையத்தளம் ஊடாக கட்டணங்களை செலுத்தும் பிரதான வாயிலாக செலான் வங்கி செயற்படுவது குறித்து மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள 011-2456018 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.